BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# அருணகிரிநாதர் காட்டும் பழங்குடியினச் சமுதாயம் : ஒரு பார்வை

முனைவர் ப.வனிதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஜஸ்டிஸ் பஷீர் அகமது சயீத் மகளிர் கல்லூரி,
சென்னை – 600 018 மின்னஞ்சல்: vani7m@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கியங்களில் சங்க காலம் தொடங்கி குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் குறித்த பதிவுகள் காணப்படுகின்றன. அவ்வகையில், கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அருணகிரிநாதரின் *திருப்புகழ்*, *கந்தர்அனுபூதி*, *கந்தரலங்காரம்* ஆகிய படைப்புகளில் பழங்குடியின மக்களின் வாழ்வியல் ஆன்மீகப் பின்னணியுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, முருகப்பெருமானின் துணைவியான வள்ளியை மையமாகக் கொண்டு வேடர் குல மக்களின் இயற்கை சார்ந்த வாழ்க்கை, வாழிடச் சூழல், தொழில்கள், உணவுமுறை, வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களை அருணகிரிநாதர் நுட்பமாகப் பதிவு செய்துள்ளமை இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

தினைப்புனம் காத்தல், வேட்டையாடுதல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் போன்ற தொழில்களும், தினைமாவு, தேன் முதலியவற்றை உணவாகவும் வழிபாட்டுப் பொருளாகவும் பயன்படுத்திய முறைகளும் திருப்புகழ்ப் பாடல்களின் வழி எடுத்துரைக்கப்படுகின்றன. மேலும், இயற்கையோடு இயைந்த வாழ்வியலைக் கொண்டிருந்த பழங்குடியின மக்களைச் சமூகத்தின் விளிம்புநிலை மக்களாக மட்டும் நோக்காமல், இறைவனின் அன்பைப் பெறும் உயர்ந்த ஆன்மீகத் தகுதி உடையவர்களாக அருணகிரிநாதர் சித்திரித்துள்ளமை விளக்கப்படுகிறது.

வள்ளி – முருகன் உறவின் வழியாக பிறப்பு, குலம், சமூக நிலை ஆகியவற்றைக் கடந்து தூய அன்பும் பக்தியும் இறையருளைப் பெறுவதற்கான அடிப்படை எனும் கருத்தை அவர் முன்வைக்கிறார். இவ்வகையில், அருணகிரிநாதரின் படைப்புகள் பக்தி இலக்கியங்களாக மட்டுமன்றி, அக்காலப் பழங்குடியினச் சமூகத்தின் இயற்கை சார்ந்த வாழ்வியல் மற்றும் சமூகப் பண்பாட்டைப் பதிவு செய்யும் முக்கியமான இலக்கிய ஆவணங்களாகவும் திகழ்கின்றன என்பதை இவ்வாய்வு நிறுவுகிறது.

**திறவுச்சொற்கள்:** அருணகிரிநாதர், திருப்புகழ், பழங்குடியினர், குறிஞ்சி நிலம், வேடர், வள்ளி, முருகன், வாழ்வியல், தினைப்புனம் காத்தல், சமூகச் சமத்துவம், பக்தி இலக்கியம்

**முன்னுரை**

சங்க காலம் முதல் தமிழ் இலக்கியங்களில் குறிஞ்சி நில மக்கள் பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன. இருப்பினும், தமிழிலக்கிய உலகில் ஏறத்தாழ கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதரின் திருப்புகழ், கந்தர் அனுபூதி, கந்தரலங்காரம், ஆகிய நூல்களில் பழங்குடி இனச் சமுதாயத்தைப் பற்றிய பதிவுகளை ஆன்மீகப் பின்னணியோடு எடுத்துரைத்துள்ளார். இதில் அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழ் பக்தி இலக்கிய உலகில் தனித்துவமான ஒரு படைப்பாகும்.

முருகனிடம் எல்லையற்ற அன்புடையவரான அருணகிரிநாதர், வள்ளியம்மையைப் பாடும் இடங்களில் எல்லாம் வேடர் குலத்தின் வாழ்வியல் முறைகளான வேட்டையாடுதல், தேன் எடுத்தல், தினைப்புனம் காத்தல், அவர்களின் உணவு, உடை, நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களை மிக நுட்பமாகக் காட்சிப்படுத்தி உள்ளார். இறைவனுக்கும் எளிய குடியில் பிறந்த

பெண்ணுக்குமான காதலைப் பாடுவதன் மூலம் மானுட சமத்துவத்தை முன்வைத்துள்ளார். இதில்,

திருப்புகழ் இறை வழிபாட்டு நூலாக மட்டுமின்றி, அக்காலச் சமூக அமைப்பு, பண்பாடு மற்றும் மக்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் சமூக ஆவணமாகவும் திகழ்கிறது. எனவே, குறிஞ்சி நில மக்களான குறவர்கள், வேடர்கள் உள்ளிட்ட பழங்குடியினரின் இயற்கை சார்ந்த வாழ்வியல், உணவுமுறை, சடங்குகள், தொழில்கள் மற்றும் அவர்களது எளிமை ஆகியவற்றை எடுத்துரைப்பதன் மூலம் அன்பிற்கு இறைவன் கட்டுப்பட்டவன் என்னும் ஆன்மீகத் தத்துவத்தை அருணகிரிநாதர் மிக அழகாகப் பதிவு செய்துள்ளதை ஆராய்வதே இக்கட்டுரை நோக்கம்.



அருணகிரிநாதர்

**பழங்குடியின மக்களின் நிலமும் இயற்கையுடனான வாழ்வியலும்**

பழங்குடி மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டவர்கள் மலைகளும் காடுகளும் நிறைந்த குறிஞ்சி நிலமே அவர்களின் வாழிடமாக இருந்தது. தொல்காப்பியரும் நிலங்களை நான்கு வகைகளைக் கூறுமிடத்து,

*“மாயோன் மேய காடு உறை உலகமும்*
*சேயோன் மேய மை வரை உலகமும்*
.............................
*முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்*
*சொல்லிய முறையான் சொல்லவும் படுமே”*

*(தொல்.அகத்.5)*

மேலும்,

*“ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப் பெயர்*
*ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே”*

*(தொல். அகத்.23)*

என்னும் நூற்பாவில் குறிஞ்சி நிலத்திற்கு உரிய மக்களாக வேட்டுவர்களைக் குறிப்பிடுகின்றார். இதற்கு உரை கூறிய ஆசிரியர்கள் வெற்பன், சிலம்பன், குறவர், கானவர், வேடர் எனக் குறிஞ்சி நில மக்களாகக் குறிப்பிட்டுள்ளனர், அருணகிரியாரும் இவர்களின் சிற்றூர்களைப் பற்றியும், இயற்கையோடு அமைந்த அமைப்பையும் பல பாடல்களில் விவரிக்கிறார். இதனை,

*“தேன் ஒழுகு சிறுகுடி வேடர் கொடி” (திருப்.636)*

என்கிறார் அருணகிரிநாதர்.

பழங்குடியினர் இயற்கையின் வளங்களைச் சுரண்டாமல், அதனுடன் தோழமையுடன் வாழ்ந்துள்ளனர்.

*“வள்ளிபடர் சாரல் வள்ளி மலை மேவு*
*வள்ளி மணவாளப் பெருமாளே” (திருப்.530)*

*“திங்கள் முக மங்கையர்கள் கொங்குபுன முந்தினைகள்*
*சிந்தைமகிழ் விண்டுகாவல் புரிவோனே”*

*(திருப்.235)*

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

**பழங்குடியினரின் தொழில்களும் வாழ்வாதாரமும்**

பழங்குடி மக்களான வேடர்களின் முதன்மைத் தொழில்களாக தினைப்புனம் காத்தல், வேட்டையாடுதல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் போன்ற வாழ்வாதார முறைகளை திருப்புகழின்வழி அறிய முடிகின்றது.

**தினைப்புனம் காத்தல்**

பழங்குடி (வேடர்) இனப் பெண்ணான வள்ளி தினைப்புனம் காத்ததை,

*“சினக்க வல்வேடர் தினைப்புனம் மேவும்*
*செழுங்கொடி போலும் வஞ்சியர் தோளா”*

*(திருப்.269)*

என்னும் பாடலில் கோபமும் வீரியமும் மிக்க வில்லேந்திய வேடர்களின் தினைப்புனத்தில் உலாவி, அங்கு காவல் புரிந்த செழுமையான கொடி போன்ற வஞ்சி மகள் வள்ளியம்மையின் அழகிய தோள்களைத் தழுவிய பெருமானே என

முருகப்பெருமானைப் போற்றுகையில் வள்ளி தினைப்புனம் காத்த குறிப்புக் காணப்படுகின்றது.

வள்ளிமலை மற்றும் அதன் சுற்றுவட்டாரத் தினைப்புனங்களில் பறவைகளை ஓட்ட வள்ளி கிளிகடி தட்டை பயன்படுத்தியதை,

*“இகல்கொள் வேடர் பெற்ற சிறுகுரங்கு ஒப்பாரும்*
*எயினர் தினைப்புனத்தே கிளிகடி தட்டையோடு”*
*(திருப்.)*

என்னும் பாடலின்வழி அறிய இயலுகிறது.

**வேட்டையாடுதல் மற்றும் தேன் எடுத்தல்**

குறவர் மற்றும் வேடர்களின் வாழ்க்கை முறையும் அவர்கள் காட்டில் வேட்டையாடி வாழ்ந்த பாங்கினையும் அருணகிரிநாதர்,

*“மறம் செய்வார் தம் வஞ்சியை மருவிய .... மணவாளா!” (திருப்.1080)*

இதில் விலங்குகளைக் கொல்லும் தொழில் உடைய வேடர்களிடத்து வாழும் வஞ்சிக் கொடி போன்று விளங்கிய வள்ளியை மணம் புரிந்த பெருமானே என்று அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார். ஆண்கள் காடுகளில் வேட்டை ஆடுவதையும் மரம், பாறை போன்றவற்றில் இருந்து தேன் சேகரிப்பதையும் முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். இதனை,

*“தேன் தினை மாவும் உண்டு*
*கானில் உழல் வேடர்*
*தேமார் தேமா காம பாகீ” (திருப்.599)*

என்னும் பாடலால் அறிய முடிகின்றது.

**பழங்குடியின மக்களின் உணவும் வழிபாட்டு முறையும்**

பழங்குடி இன மக்களின் உணவுமுறை அவர்களின் வழிபாட்டுப் பொருளாகவும் இருந்துள்ளது. ஆடம்பரமில்லா எளிமையான வழிபாட்டை மேற்கொண்டுள்ளதை அருணகிரிநாதர் தம் பாடல்களில் மிகுதியாக எடுத்துரைத்துள்ளார். அவர் வாழும் பகுதிகளில் கிடைக்கும் மலைத்தேன், தினை மாவு, கிழங்கு, மலர்கள் ஆகியவற்றை கொண்டே இறைவனை வழிபட்டுள்ளனர்.

“கானவர் தினை மாவு தேனும் அமுது செய்பவனே” (திருப்.15)

*“கடிமா மலர்க்கு ளின்ப முறவேரி கக்கு நண்பு*
*தருமா கடப்ப மைந்த .... தொடைமாலை*
*கனமேரு வொத்தி டும்ப னிருமாபு யத்த ணிந்த*
*கருணா கரப்ர சண்ட ... கதிர்வேலா” (திருப்.209)*

என்னும் திருப்புகழில் வாசனை மிகுந்த மலருள் மிக இனிப்பான தேனைச் சொட்டுவதும் அன்பைப் பொழிவதுமான சிறப்பான கடப்ப மலரால் நெருக்கமாகத் தொடுக்கப்பட்ட பூமாலையைப் பன்னிரு புயங்களின் மீது அணிந்துள்ள கருணைக்கு உறைவிடமானவனே என்று போற்றிப் புகழ்கின்றார் அருணகிரிநாதர்.

**இறைவனும் பழங்குடியினச் சமூகமும்**

அருணகிரிநாதர் காட்டும் பழங்குடியினச் சமுதாயப் பார்வையின் முக்கிய அங்கமாக இருப்பது சமூகச் சமத்துவம் ஆகும். அக்காலத்தில் விளம்பு நிலையில் வைக்கப்பட்டிருந்த பழங்குடியின(வேடர்)ரை, பேரரசனாக விளங்கிய முருகப்பெருமான் தேடிச் சென்று அடைக்கலமானான் என்பதை,

*“சாரல் இறைவி கானம் மால் வேடர் சுதை பாகா”*
*(திருப்.637)*

என்கிறார்.

தேவர்கள் மட்டுமின்றி எளிய பழங்குடியின மக்களும் தொழும் தெய்வமாக விளங்கியவன் முருகப்பெருமான் என்பதை,

*“குடமுனி கற்க அன்று தமிழ் செவியில்*
*பகர்ந்த குமர குறத்தி நம்பு(ம்) பெருமாளே”*
*(திருப்.1080)*

என்னும் பாடலடி பறைசாற்றுகின்றது.

**பழங்குடியினப் பெண்ணும் ஆன்மீகத் தத்துவமும்**

அருணகிரிநாதர் வள்ளியை வெறும் பழங்குடியினப் பெண்ணாக மட்டுமின்றி வள்ளி என்பவள் ஆன்மீகத் தத்துவத்தில் ஆட்பட்டிருக்கும் மனித ஆத்மா(ஜீவாத்மா)வாகத் தான் பார்க்கின்றார். அந்த ஜீவாத்மாவை ஆட்கொள்ளும் பரமாத்மாவாக முருகப்பெருமான் திகழ்கின்றார். பெண்ணை ஆன்மீகத்தின் உயர்ந்த குறியீடாக அருணகிரிநாதர் உயர்த்திக் காட்டி இருப்பது அவரது புரட்சிகரமான சிந்தனையை எடுத்துக்காட்டுகிறது.

**முடிவுரை**

அருணகிரிநாதர் தம் திருப்புகழ் பாடல்கள் வழியாகக் காட்டும் பழங்குடியினச் சமுதாயம் இயற்கையோடு இயைந்த வாழ்வியலைக் கொண்டது. தேன் எடுத்தல், தினைப்புனம் காத்தல் போன்ற தொழில்களைச் செய்து உழைப்பை மூலதனமாகக் கொண்டு வாழ்ந்ததை அறிய இயல்கிறது. சாதி, குலச்சடங்கு முறைகளைக் கடந்து தூய்மையான அன்பினால் இறைவனை அடையும் வழியைக் கண்டுணர்ந்துள்ளனர். தேவலோக மங்கையான

தெய்வயானைக்குக் கொடுத்த இடத்தை விட, குறிஞ்சி நிலப் பெண்ணான வள்ளி தேவிக்குத் திருப்புகழில் அருணகிரிநாதர் முதன்மை இடம் அளித்துள்ளார். இதனால் இறைவனுக்கு முன் பிறப்பும் குலமும் முக்கியமில்லை தூய பக்தியும் அன்புமே முதன்மையானது என்று உரைக்கின்றார்.

**துணைநூற் பட்டியல்**


1. செங்கல்வராயப்பிள்ளை (உ.ஆ.), முருகவேள் பன்னிரு திருமுறை, ஸ்ரீமதி மீனாக்ஷி கலியாண சுந்தரம், சென்னை, 1951
2. தொல்காப்பியப் பொருளதிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1953.


*****